# கிறிஸ்துவுக்கு புகழ்

அன்பின் வாசக நெஞ்சங்களே!

தவக்காலம் இம்மாதத்திலேயே ஆரம்பமாகிறது. ஒவ்வொரு வருடமும் எமக்கு இறைவன் தரும் இன்னுமொரு சந்தர்ப்பமாக இருக்கிறது. தவக்காலம் என்பது ஒவ்வொரு கத்தோலிக்கருக்கும் மிகவும் முக்கியமான காலமாகும். தவக்காலத்திலே எமது கிறிஸ்தவ வாழ்வை சீர்தூக்கிப் பார்க்கும் காலமாக இருக்கிறது. “காணாமற்போன மகனின் உவமையிலே கூறப்படுவபோல “இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்பட தகுதியற்றவன்” என்று நாம் ஒவ்வொருவரும் உணரும் காலம் இது. நிறைய நாட்கள் தரப்பட்டுள்ளன.

இவை யாவையும் சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது எமது முக்கிய கடமையாகும். இன்னும் இக்காலத்தில் தனிப்பட்ட வாழ்க்கையையும், குடும்ப வாழக்கையையும், சமூக வாழ்க்கையையும் முக்கியமாக அலசி ஆராய்ந்து இறைவனிடமும், அயலவரிடமும் உறவை சீர் செய்ய வேண்டிய காலமாகவும் இருக்கின்றது. இத்தவக்காலத்தை வந்து போகின்றதொன்றாகக் கருதாமல், எம்முடைய வாழ்க்கையிலும் மாற்றத்தை காணுகின்றதொன்றாக கருதி சில செயற்பாடுகளை செய்ய நாம் முன்வர வேண்டும்.

மீண்டுமாக உறவைக் கட்டியெழுப்புகின்றதொன்றாகக் கருதி இறைவனுடைய ஆசியைக் பெறுகின்ற காலமாக பயன்படுத்த திருச்சபை எம்மை அழைத்து நிற்கின்து. வாழ்க்கையின் அர்த்தத்தை உணர்கின்ற நாம், எப்பொழுதும் இறைவனை நோக்கியே பயனிக்க முன்வரவேண்டும், வாழ்வின் அர்த்தத்தை கண்டுபிடிக்க வேண்டும். இறைவன் எம்மை இந்த உலகில் வாழப் படைத்திருக்கிறார். ஆவிக்குரிய வாழ்கையை சரியான முறையில் வாழ நாம் அழைக்கப்படுகிறோம். தனிப்பட்ட உள் நோக்கங்களை ஆராயும் பொழுது ஒருவரின் நல்ல அல்லது கெட்ட பழக்கம் மனதிற்கு வரும். வரும் நல்லவைகளை மிகவும் சிறப்பாகச் செய்யவும், கெட்டவைகளை விலக்கிக் கொள்ளவும் நாம் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

தூய பவுல் அடிகளார் கூறுவது போல ஆவிக்குரிய செயற்பாடுகள் கனிகள் அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம், (கலாத்தியர் 5:22) அவற்றை எமது வாழ்வில் வளர்க்க வேண்டும். ஊனியல்புகளின் செயற்பாடுகளான பரத்தமை,(விபச்சாரம்), கெட்ட நடத்தை, காமவெறி, சிலை வழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் (கலாத்தியர் ' 5:18). என்பன முற்றுமுழுதாக நாம் அகற்ற வேண்டும். அப்போதுதான் நாம் செய்யும் தபம், செபம், தானதருமம் எல்லாம் அர்த்தமுள்ளதாக இருக்கும். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எம்மை மீட்பதாக.

**நன்றி**

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
Parish Priest
Our Lady of Deliverance Tamil Catholic Mission
Montreal (QC), Canada.